**நீதித்துறை நடுவர் மன்றம் எண்.2, திண்டிவனம்.**

**முன்னிலை : திருமதி.M.அபிநயா.,B.A.,B.L.,**

**நீதித்துறை நடுவர் எண்.2. திண்டிவனம்,**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் நாள் புதன்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.78/2020**

**CNR No.TNVP11-000372-2020**

<table>
<tr><th>வ. எண்.1</th><th>விளக்கம்</th><th>:</th><th colspan="2">விவரங்கள்</th></tr>
<tr><td>1</td><td>குற்றமுறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி</td><td>:</td><td colspan="2">காவல் உதவி ஆய்வாளர்,<br>பிரம்மதேசம் காவல்நிலையம்,<br>விழுப்புரம் மாவட்டம்,<br>குற்ற எண்.419/2020.</td></tr>
<tr><td>2</td><td>எதிரிகளின் பெயர் மற்றும் முகவரி</td><td>:</td><td colspan="2">1. கலியபெருமாள், வயது 48/2020,<br>த/பெ.ஏழுமலை,<br>மேட்டுத்தெரு, முன்னூர் கிராமம், மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.<br>2.சங்கர், வயது 39/2020,<br>த/பெ.மஞ்சினி கவுண்டர், நெ.1258, கே.தெரு, ஜே,ஜே,நகர், கொருக்குப்பேட்டை, சென்னை.<br>3.சசிகலா, வயது 32/2020,<br>க/பெ.சங்கர்,<br>நெ.1258, கே.தெரு, ஜே,ஜே,நகர், கொருக்குப்பேட்டை, சென்னை.<br>4. ஆரவல்லி, வயது 43/2020,<br>க/பெ.கலியபெருமாள்,<br>மேட்டுத்தெரு, முன்னூர் கிராமம், மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.</td></tr>
<tr><td rowspan="2">3</td><td rowspan="2">எதிரிகள் கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த நாள் மற்றும் பிணையில் சென்ற நாள்/</td><td rowspan="2">:</td><td>கைது/<br>சரணடைந்த நாள்</td><td>பிணையில் சென்ற நாள்</td></tr>
<tr><td>A1-28.05.2020<br>A2-25.03.2026<br>A3-25.03.2026<br>A4-25.03.2026</td><td>A1-03.06.2020<br>A2-25.03.2026<br>A3-25.03.2026<br>A4-25.03.2026</td></tr>
</table>

<table>
<tr><td>4</td><td>குற்றம் நடந்த நாள்</td><td>:</td><td colspan="3">27.05.2020</td></tr>
<tr><td>5</td><td>கோப்பில் எடுத்த நாள்</td><td>:</td><td colspan="3">13.10.2020</td></tr>
<tr><td>6</td><td>எதிரிகள் ஆஜராகிய நாள்</td><td>:</td><td colspan="3">03.12.2020</td></tr>
<tr><td>7</td><td>புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="3">09.10.2020</td></tr>
<tr><td>8</td><td>எதிரிகளிடம் பிரிவுகள் 228, 240, 246, 281 அல்லது 251 குவிமுச வின் கீழ் வினவப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="3">18.12.2020</td></tr>
<tr><td>9</td><td>குற்றவியல் பல்வகை மனுக்கல் தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் அதன் இறுதி உத்தரவின் மேலான மேல்முறையீடு எதுவும் இருப்பின் அந்த நீதிமன்றம் குறித்த விபரம்</td><td>:</td><td colspan="3">1.311 of Crpc –12.08.2025<br>Result: Allowed.</td></tr>
<tr><td rowspan="7">10</td><td rowspan="7">சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை</td><td>:</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td></td><td>அ.சா.1</td><td>07.09.2022</td><td>01.09.2025</td></tr>
<tr><td></td><td>அ.சா.2</td><td>07.09.2022</td><td>01.09.2025</td></tr>
<tr><td></td><td>அ.சா.3</td><td>27.11.2024</td><td>27.11.2024</td></tr>
<tr><td></td><td>அ.சா.4</td><td>27.11.2024</td><td>27.11.2024</td></tr>
<tr><td></td><td>அ.சா.5</td><td>22.07.2025</td><td>01.09.2025</td></tr>
<tr><td></td><td>அ.சா.6</td><td>07.08.2025</td><td>12.02.2026</td></tr>
<tr><td>11</td><td>சாண்றுபொருள்</td><td>:</td><td colspan="3">அ.சா.பொ.1 (சுமார் 65cm நீளமும், 2cm அகலமும் கொண்ட இரும்பு ராடு–1 C.P.No.310/2022)</td></tr>
<tr><td>12</td><td>எதிரிகளிடம் பிரிவு 313(1) (ஆ) குவிமுசவின் கீழ் வினவப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="3">24.02.2026</td></tr>
<tr><td>13</td><td>விசாரணை முடிக்கப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="3">24.02.2026</td></tr>
<tr><td>14</td><td>எதிரிகள் தலைமறைவாக</td><td>:</td><td colspan="3"></td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | இருந்த நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நாள் | | --- |
| 15 | மேல் நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தடை மற்றும் இறுதி உத்தரவு குறித்த விவரம். | : | --- |
| 16 | குற்றச்சாட்டுக்கள் | : | 1 வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 326, 506(2) IPC–ன் கீழும், 2 வது எதிரி மீது 294(b), 323, 506(2) IPC–ன் கீழும், 3 மற்றும் 4 வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b) IPC–ன் கீழும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| 17 | சட்டப்பிரிவுகள் | : | 294(b), 323, 326, 506(2) IPC |
| 18 | தீர்ப்புரை. | : | முடிவாக 1 வது எதிரியின் மீது பிரிவுகள் 294(b), 326, 506(2) IPC–ன் கீழும், 2 வது எதிரியின் மீது பிரிவுகள் 294(b), 323 506(2) IPC–ன் கீழும், 3 மற்றும் 4 வது எதிரிகள் மீது 294(b) IPC–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மாணித்து கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை இந்நீதிமன்றத்தால் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இந்த வழக்கானது கடந்த 13.10.2020 அன்று இந்நீதிமன்றக் கோப்பில் எடுக்கப்பட்டது. அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும் எதிரிகளுக்காக வழக்கறிஞர் திரு.R. ராஜ கணபதி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும் விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட பின்பு வழக்கு ஆவணங்களையும் பரசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

**01**.இவ்வழக்கானது 1வது சாட்சி வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசிக்கும் 1–வது எதிரி வீட்டிற்கு சென்னையிலிருந்து 2, 3 எதிரிகள் குழந்தைகளுடன் வந்து தங்கியிருந்தனர். இந்நிலையில் கடந்த 3 மாதங்களாக கரோனா வைரஸ் பரவல் சம்மந்தமாக அடிக்கடி டிவியில் வெளியூர்களிலிருந்து வரும் நபர்களால் கரோனா பரவுவதாக விளம்பரங்கள் வருவதால் 1–வது சாட்சி, 2–வது சாட்சி தனது மனைவி லோகநாயகி மற்றும் குழந்தைகளை 1 வது எதிரி வீட்டிற்கு செல்ல வேண்டாம் என்றும், அதே போல் 1–வது எதிரியை அழைத்து உங்க வீட்டை சேர்ந்தவர்கள் யாரும் எனது வீட்டிற்கு வர வேண்டாம் என்றும் கூறியுள்ளார். இதனால் 1–வது எதிரி தன்னை அவமானப்படுத்துவதாக நினைத்து விரோதம் கொண்டிருந்தார். இந்நிலையில் 27.05.2020 ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் 3,4 எதிரிகள் 2–வது சாட்சி தனது வீட்டின் வெளியே உட்கார்ந்திருந்த போது " ஏன்டி தேவிடியா, எங்க வீட்டுல தான் கரோனா வரும், உங்க வீட்டில இருக்கிறவங்களுக்கு கரோனா வராதா" என்று அசிங்கமாக திட்டிய போது, 1 வது சாட்சி, 2 வது சாட்சியை திட்டம் செய்துள்ளார். அப்பொழுது 1 வது எதிரி தனது கையில் இரும்பு ராடுடன், 2 வது எதிரியை அழைத்துக்கொண்டு, 1–வது சாட்சி வீட்டின் எதிரில் வந்து, 1–வது சாட்சியை பார்த்து, " ஏன்டா தேவிடியா பையா, கரோனா வந்தா எல்லாரும் சாக போறோம், நீ மட்டும் என்னடா உயிரோடு இருக்க போற " என்று அசிங்கமாக திட்டி, 2 வது எதிரி, 1–வது சாட்சி கன்னத்தில் ஓங்கி அறைந்தும், 1–வது எதிரி, 1–வது சாட்சியை பார்த்து வெளியில போனாதான்டா கரோனா வரும் வீட்டு உள்ளே இருந்தா கரோனா வராது என்று திட்டி கையில் வைத்திருந்த இரும்பு ராடால் 1–வது சாட்சி பின் பக்க தலையிலும், வலது காலிலும் ஓங்கி அடித்து, 1, 2 எதிரிகள் இரும்பு ராடை காண்பித்து எங்களிடம் பிரச்சனை செய்தால் இந்த இரும்பு ராடால் அடித்து சாகடித்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து, 1–வது சாட்சிக்கு கொடுங்காயம் ஏற்படுத்திய குற்றத்தினை எதிரிகள் புரிந்துள்ளார்கள்

என்று பிரம்மதேசம் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02.**எதிரிகளுக்கு இந்நீதிமன்றத்தின் மூலம் கு.வி.மு.ச பிரிவு 204ன் கீழ் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகிய போது அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**03.** இவ்வழக்கின் இறுதி அறிக்கையும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து வாதி தரப்பும் எதிரிகள் தரப்பும் கேட்கப்பட்டு எதிரிகள் குற்றம் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருக்கிறது என்பதால், 1 வது எதிரியின் மீது பிரிவுகள் 294(b), 326, 506(2) IPC–ன் கீழும், 2 வது எதிரியின் மீது பிரிவுகள் 294(b), 323 506(2) IPC–ன் கீழும், 3 மற்றும் 4 வது எதிரிகள் மீது 294(b) IPC–ன் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டு அக்குற்றச்சாட்டை எதிரிகளுக்கு படித்து காட்டி விளக்கி வினவியபோது எதிரிகள் பொய் வழக்கு என்றும் குற்றவாளி இல்லை என்றும் மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள். எனவே, அதைத் தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

**04.** அரசு தரப்பில் இவ்வழக்கில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சாண்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சாண்றுபொருள் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**05.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் அவர்களது சாட்சியங்கள் அனைத்தும் பொய்யானவை

என்று கூறினார். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் குறித்து வினவியபோது யாரும் இல்லை என்று கூறியதால் எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சாண்றுபொருள் எதுவும் முன்னிறுத்தப்படவில்லை.

**06**. இவ்வழக்கில் தீர்மாணிக்கப்படவேண்டிய பிரச்சனை ஏதேனில் எதிரிகள் மீதான குற்றம் அரசு தரப்பால் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**07. தீர்வு:**

இவ்வழக்கானது 1வது சாட்சி வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசிக்கும் 1–வது எதிரி வீட்டிற்கு சென்னையிலிருந்து 2, 3 எதிரிகள் குழந்தைகளுடன் வந்து தங்கியிருந்தனர். இந்நிலையில் கடந்த 3 மாதங்களாக கரோனா வைரஸ் பரவல் சம்மந்தமாக அடிக்கடி டிவியில் வெளியூர்களிலிருந்து வரும் நபர்களால் கரோனா பரவுவதாக விளம்பரங்கள் வருவதால் 1–வது சாட்சி, 2–வது சாட்சி தனது மனைவி லோகநாயகி மற்றும் குழந்தைகளை 1 வது எதிரி வீட்டிற்கு செல்ல வேண்டாம் என்றும், அதே போல் 1–வது எதிரியை அழைத்து உங்க வீட்டை சேர்ந்தவர்கள் யாரும் எனது வீட்டிற்கு வர வேண்டாம் என்றும் கூறியுள்ளார். இதனால் 1–வது எதிரி தன்னை அவமானப்படுத்துவதாக நினைத்து விரோதம் கொண்டிருந்தார். இந்நிலையில் 27.05.2020ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் 3,4 எதிரிகள் 2–வது சாட்சி தனது வீட்டின் வெளியே உட்கார்ந்திருந்த போது " ஏன்டி தேவிடியா, எங்க வீட்டுல தான் கரோனா வரும், உங்க வீட்டில இருக்கிறவங்களுக்கு கரோனா வராதா" என்று அசிங்கமாக திட்டிய போது, 1 வது சாட்சி, 2 வது சாட்சியை திட்டம் செய்துள்ளார். அப்பொழுது 1 வது எதிரி தனது கையில் இரும்பு ராடுடன், 2 வது எதிரியை அழைத்துக்கொண்டு, 1–வது சாட்சி வீட்டின் எதிரில் வந்து, 1–வது சாட்சியை பார்த்து, " ஏன்டா தேவிடியா பையா, கரோனா வந்தா எல்லாரும் சாக போறோம், நீ

மட்டும் என்னடா உயிரோடு இருக்க போற " என்று அசிங்கமாக திட்டி, 2 வது எதிரி, 1–வது சாட்சி கன்னத்தில் ஓங்கி அறைந்தும், 1–வது எதிரி, 1–வது சாட்சியை பார்த்து வெளியில போனாதான்டா கரோனா வரும் வீட்டு உள்ளே இருந்தா கரோனா வராது என்று திட்டி கையில் வைத்திருந்த இரும்பு ராடால் 1–வது சாட்சி பின் பக்க தலையிலும், வலது காலிலும் ஓங்கி அடித்து, 1, 2 எதிரிகள் இரும்பு ராடை காண்பித்து எங்களிடம் பிரச்சனை செய்தால் இந்த இரும்பு ராடால் அடித்து சாகடித்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து, 1–வது சாட்சிக்கு கொடுங்காயம் ஏற்படுத்திய குற்றத்தினை எதிரிகள் புரிந்துள்ளார்கள் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

**08.**அ.சா.1 சக்திவேல் தனது சாட்சியத்தில் தனது சாட்சியத்தில், தான் தற்போது சென்னையில் காய்கறி வியாபாரம் செய்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது பக்கத்து வீட்டுக்காரர்கள் மற்றும் உறவினர்கள் என்றும் கொரானா காலகட்டத்தில் வீட்டில் உள்ள தன் பிள்ளைகளிடமும், மனைவியிடமும் எங்கும் வெளியில் செல்லக்கூடாது என்று கூறியதாகவும், ஆஜர் எதிரி கலியபெருமாள் வீட்டிற்கு சென்னையிலிருந்து கொரானா சமயத்தில் சங்கர் அவரது மனைவி குழந்தைகள் எல்லாரும் வந்திருந்தார்கள் என்றும், தான் தனது பிள்ளைகளையும, மனைவியையும் வெளியே செல்ல வேண்டாம் என்று திட்டமிட்டிருந்தேன் என்றும் கடந்த 27.05.2020 அன்று இரவு 08.00 மணியளவில் கலியபெருமாள் மற்றும் அவரது அக்கா, அவரது மனைவியும் சேர்ந்து சென்னையில் இருந்து வந்தா என்ன கொரானாவா என அசிங்கமாக தேவிடியாபையா என்று திட்டி சட்டையை இழுத்து தகராறு செய்துகொண்டிருந்த போது சங்கர் மற்றும் கலியபெருமாள் அச்சமயம் ஓடி வந்து கலியபெருமாள் தன்னை கொரானாகிரானா என்று சொன்னால் தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த இரும்பு கடப்பாறை கம்பியால் தனது பின்பக்க தலையில் ஓங்கி அடித்தார்

என்றும், பின்பு தான் கீழே விழுந்தவுடன் மீண்டும் அவர் தன்னை காலால் எட்டி உதைத்தார் என்றும், அதன்பின்னிட்டு தான் மயங்கிவிட்டேன் என்றும், தனக்கு எதுவும் தெரியாது என்றும், தனது மனைவியை கலியபெருமாள் எட்டி உதைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**09.**மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில், தன்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு தானும், தனது மனைவியும் சென்றோம் என்றும், மறுநாள் பிரம்மதேசம் காவலர்கள் தன்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தனர் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்ததுதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், சம்பவத்தின் போது எதிரி பயன்படுத்திய ஆயுதத்தை சாட்சி நீதிமன்றத்தில் வைத்திருந்ததை காண்பித்து அந்த இரும்பு ராடால் தன்னை அடித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்ததின் அடிப்படையில் அந்த இரும்பு ராடு அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**10.**அ.சா.2 திருமதி.லோகநாயகி தனது சாட்சியத்தில், தான் கூலிவேலை செய்து வருகிறேன் என்றும் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும், கடந்த 27.05.2020 அன்று இரவு 8 மணியளவில் அச்சமயத்தில் கொரானா காலம் என்பதால் தன்னிடமும், தன் பிள்ளைகளிடமும் ஆஜர் எதிரிகளில் 2 மற்றும் 3 சென்னையில் இருந்து ஆஜர் 1 வது எதிரியின் வீட்டிற்கு வந்தார்கள் அதனால் வெளியே செல்ல வேண்டாம் என்று கூறினார் என்றும் முதலில் சின்னபொண்ணு என்கிற சசிகலா வந்து தனது கணவரிடம் சென்னையில் இருந்து வந்தா என்ன

கொரானாவா என்று சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், தான் தூரத்தில் அடுப்படியில் இருந்தேன் என்றும், தான் சும்மா பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்து கொண்டிருந்தேன் என்றும், அதன்பிறகு பார்த்தால் தனது கணவரை 4 பேரும் சேர்ந்து அடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், தான் போய் கேட்கும் போது தன்னை அசிங்கமாக ஆரவல்லி என்பவர் அங்க போனவளே, இங்கு போனவளே என்று அசிங்கமாக திட்டிக்கொண்டிருக்கும் போது கலியபெருமாள் கையில் இரும்பு ராடை எடுத்து தன்னுடைய கணவர் பின் தலை மற்றும் காலில் அடித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11.**மேலும் அ.சா.2 தனது சாட்சியத்தில், தான் வேணாம் என்று சொல்லி மறித்து விடும்போது தன்னை கலியபெருமாள் எட்டி எட்டி உதைத்தார் என்றும், தன் கணவருக்கு இரத்தமாக வந்தது என்றும் அதன் பின்னிட்டு எதிரிகள் தூரத்தில் சென்றுவிட்டார்கள் என்றும் தானும், தன் பிள்ளைகளும் மற்றவர்கள் உதவியுடன் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து வரவழைத்து தன் கணவரை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தேன் என்றும், அதன்பின்னிட்டு மருத்துவமனையில் போலீசார் விசாரித்து எழுதிக்கொண்டார்கள் என்றும், தன்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், தன் கணவரை தாக்கிய ஆயுதத்தை தான் பார்த்தால் அடையாளம் காட்டுவேன் என்றும், நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஆயுதம் தான் எதிரி தன் கணவரை தாக்கிய ஆயுதம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**12.**அ.சா.3 சக்திவேல் தனது சாட்சியத்தில், தான் தற்போது ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன் என்றும், சாட்சிகள் சக்திவேல், லோகநாயகி ஆகியோர்களை தனக்கு தெரியாது என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், கடந்த 5 மாதங்களுக்கு முன்பு தான் பிரம்மதேசம் காவல்நிலையத்திற்கு தங்கள்

ஊரிலுள்ள சில நபர்களுடன் நிலம் தகராறு சம்மந்தமாக சென்றபோது தன்னிடம் பெயர், முகவரி கேட்டு எழுதிக்கொண்டார்கள் என்றும், மற்றபடி வழக்கினை குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.3–ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அ.சா.3 எதிரிகளின் செயல்கள் குறித்து எந்தவிதமான சாட்சியமும் அளிக்காததால் அ.சா.3–ன் சாட்சியத்தின் அடிப்படையில் அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி குறுக்கு விசாரணையின் பொழுது அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சங்கதிகளும் புலப்படவில்லை.

**13.**அ.சா.4 கோபால் தனது சாட்சியத்தில் தான் தற்போது வெல்டிங் வேலை செய்து வருகிறேன் என்றும், சாட்சி வெங்கடேசனை தனக்கு தெரியும் என்றும், அவர் தங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்றும் தன்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1–வது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கடந்த 4, 5 வருடங்களுக்கு முன்பு பிரம்மதேசம் காவல்நிலையத்திற்கு சென்றபோது தன்னிடம் அந்த கையொப்பங்கள் வாங்கினார்கள் என்றும், மற்றபடி எதுவும் இந்த வழக்குச் சம்மந்தமாக தனக்கு தெரியாது என்றும், பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள சாட்சியின் கையொப்பங்கள் அ.சா.ஆ.2, அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், இந்த வழக்குச் சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.4–ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அ.சா.4 எதிரிகளின் செயல்கள் குறித்து எந்தவிதமான சாட்சியமும் அளிக்காததால் அ.சா.4–ன் சாட்சியத்தின் அடிப்படையில் அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி குறுக்கு விசாரணையின் பொழுது அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித

சங்கதிகளும் புலப்படவில்லை.

**14.**அ.சா.5 திரு.விநாயகம், சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தான் ஒலக்கூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து பணி ஓய்வு பெற்று இருந்து வருவதாகவும், கடந்த 28.05.2020, 11.30 மணிக்கு பிரம்மதேசம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற மருத்துவ தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த முன்னூர் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் சக்திவேல் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று 13.30 மணிக்கு நிலையம் வந்து நிலையக்குற்ற எண்.419/2020, U/sec.294(b), 323, 324, 506(2) IPC–ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றும், பின்னர் அதன் அசலை கனம் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை வழக்கு கோப்புடன் இணைத்து உதவி ஆய்வாளரின் விசாரணைக்காக வைத்தேன் என்றும் அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், உதவி ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**15**. அ.சா.6 திரு.சசிக்குமார் காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தான் தற்போது ஒலக்கூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் என்றும், கடந்த 28.05.2020 அன்று பிரம்மதேசம் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபொழுது பிரம்மதேசம் காவல்நிலையக்குற்ற எண்.419/2020, U/sec.294(b), 323, 324, 506(2) IPC–ன் கீழ் வழக்கு பதிவு செய்ததை தனது பார்வைக்கு வைத்ததை அன்றைய தினமே பகல் 14.30 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடமான

முன்னூர் கிராமம், மேட்டுத்தெருவில் உள்ள சக்திவேல் வீட்டின் எதிரே சம்பவயிடம் சென்று ஆஜர் சாட்சிகள் 1. கோபால், 2. வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அவர்களை விசாரணை செய்தேன் என்றும் அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் பகல் 15.30 மணிக்கு சம்பவயிடத்தில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சுமார் 65 செ.மீ நீளமும், சுமார் 2 செ.மீ அகலமும் கொண்ட இரும்பு ராடு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் சாட்சிகள் சக்திவேல், லோகநாயகி, சக்திவேல் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் சாட்சியம் அளித்துள்ளார்.

**16**. மேலும், அ.சா.6 தனது சாட்சியத்தில், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் தனது இரகசிய விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகளை தேடிச்சென்றபோது எதிரிகள் ஆலங்குப்பம் பேருந்து நிறுத்தம் அருகில் அன்றைய தினமே சாட்சிகள் அடையாளம் காட்ட 17.30 மணிக்கு எதிரி சங்கர், வயது 39, த/பெ.மஞ்சினிகவுண்டர் என்பவரை காரணம் கூறி கைது செய்தும், கைதின்போது கைது பற்றி தகவலை அவருடைய உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும், கைதின்போது உச்சநீதிமன்ற கட்டளைகளை முறையாக நிறைவேற்றியும் பின்னர் 18.15 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனைக்கு பின் பாராவசம் ஒப்புவித்து அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**17**. மேலும், அ.சா.6 தனது சாட்சியத்தில், பின்னர் 04.08.2020 அன்று காயம்பட்ட சக்திவேல் என்பவருக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட

காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கிய திண்டிவனம் அரசு மருத்துவமனை மருத்துவர் இளங்கோ என்பவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் அந்த காயச்சான்றிதழ் அ.சாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் அன்றைய தினமே பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) IPC லிருந்து 294(b), 323, 506(2), 326 IPC ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும் அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் பின்னர் அனைத்து விசாரணைகளையும் முடித்து 1– வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 326, 506(2) IPC ன் படியும், எதிரி 2–ன் மீது பிரிவுகள் 294(b), 323, 506(2) IPC ன் படியும் மற்றும் எதிரிகள் 3, 4 –ன் மீது 294(b) IPC–ன் படியும் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**18.** அ.சா.1 தனது சாட்சியத்தில் முதலில் கலியபெருமாள் மற்றும் அவரது அக்கா அவரது மனைவியும் சேர்ந்து தகராறு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 முதலில் சின்ன பொண்ணு (எ) சசிகலா வந்து தனது கணவரிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தார் என்று அ.சா.1 சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 புகாரை பரிசீலனை செய்கையில் முதலில் எதிரிகள் ஆரவல்லி மற்றும் சசிகலா ஆகியோர் அ.சா.2 இடம் பிரச்சனை செய்ததாக குறிப்பிட்டு புகார் கொடுத்துள்ளார். ஆனால் மேற்படி புகாருக்கு முரண்பட்டு அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.1 தனது சாட்சியத்தில் தன்னை கலியபெருமாள் இரும்பு கடப்பாறை கம்பியால் அடித்ததாகவும், காலால் எட்டி உதைத்ததாகவும், அதன் பின்னிட்டு தான் மயங்கிவிட்டதாகவும் தனது மனைவியை கலியபெருமாள் எட்டி உதைத்ததாக கூறினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். தனது மனைவியை எட்டி உதைத்ததாக யார் அ.சா.1 இடம் தகவல் சொன்னார்

என்பதை பொறுத்து அ.சா.1 எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும் தனது மனைவியை காலால் எட்டி உதைத்ததாக புகார் வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை.

**19.**மேலும் சம்பவம் இரவு 8:00 மணிக்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது, சம்பவயிடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் இருந்தாலும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரணை செய்யவில்லை. மேலும் அ.சா.1–ன் விபத்து பதிவேட்டை பார்வையிடும் போது அதில் அ.சா.1 தன்னை தெரிந்த 6 நபர்கள் இரும்பு கடப்பாறையால் தாக்கியதாக சொல்லி தான் சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளார். ஆனால் தன்னை 4 நபர்கள் தாக்கியதாக தான் புகார் வாக்குமூலத்திலும் போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளார். அ.சா.1 சிகிச்சை எடுத்துக்கொள்ளும் பொழுது மருத்துவரிடம் தன்னை கடப்பாறையால் தாக்கியதாக சொல்லிவிட்டு புகார் வாக்குமூலத்தில் இரும்பு ராடு என்று குறிப்பிட்டு விட்டு நீதிமன்ற சாட்சியத்தின் பொழுது இரும்பு கடப்பாறை கம்பி என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி விவரங்களை பரிசீலனை செய்கையில் உண்மையிலேயே சம்பவத்தில் எத்தனை நபர்கள் ஈடுபட்டார்கள் என்பதை குறித்தும், சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதத்தை பொறுத்தும் சந்தேகங்களை எழுப்புகிறது. இவ்வழக்கில் கேள்விப்பட்ட சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.3 தான் காவல் நிலையத்திற்கு சென்ற பொழுது பெயர் முகவரி கேட்டு எழுதி கொண்டார்கள் மற்றபடி வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்றும் போலீசார் வழக்கு சம்பந்தமாக தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்.

**20.**மேலும் இவ்வழக்கின் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.4 தன் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம்

வரைந்ததாகவும் தன் முன்னிலையில் வழக்கு சொத்தான இரும்பு ராடை கைப்பற்றியதாகவும், எந்தவிதமான சாட்சியமும் அளிக்காமல் தான் காவல் நிலையத்திற்கு சென்ற பொழுது அங்கு கையொப்பம் வாங்கியதாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். கைப்பற்றுதல் மகசர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறியுள்ள காரணத்தினால் உண்மையிலேயே மேற்படி இரும்பு ராடு இவ்வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டு அது கைப்பற்றப்பட்டதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இவ்வழக்கில் அ.சா.5 சிறப்பு உதவி ஆய்வாளர் மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 தான் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**21**.வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில் இவ்வழக்கில் அ.சா.5 மருத்துவ தகவலை பெற்று புகார் வாக்குமூலம் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை பொறுத்து சாட்சியளித்திருந்தாலும் அ.சா.6 விசாரணை அதிகாரி தான் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்திருந்தாலும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திற்கு முரண்பாடாக அ.சா.1, அ.சா.2 சாட்சியம் அளித்துள்ள காரணத்தினாலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியங்கள் முரண்பாடாக உள்ள காரணத்தினாலும் அ.சா.3 அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவிதமான சாட்சியமும் அளிக்காத காரணத்தினாலும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.4 தன் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்ததாகவும் தன் முன்னிலையில் வழக்குச் சொத்தான இரும்புராடை கைப்பற்றியதாகவும் எந்தவிதமான சாட்சியமும் அளிக்காத காரணத்தினாலும், இவ்வழக்கில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக சேர்த்து விசாரணை செய்யாத காரணத்தினாலும் சம்பவயிடத்திற்கு அருகில் உள்ள வீடுகளில் உள்ள நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து

விசாரணை செய்யாத காரணத்தினாலும் உண்மையிலேயே வழக்கின் எதிரிகளால் தான் அ.சா.1–க்கு காயம் ஏற்பட்டதா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது.

**22.**மேற்சொன்ன விவரங்களை பரிசீலனை செய்கையில் உண்மையிலேயே அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது போல் தான் இவ்வழக்கின் சம்பவம் நடைபெற்றதா என்ற சந்தேகத்தை எழுப்புவதால் மேற்படி சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக வைத்து எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

முடிவாக 1 வது எதிரியின் மீது பிரிவுகள் 294(b), 326, 506(2) IPC–ன் கீழும், 2 வது எதிரியின் மீது பிரிவுகள் 294(b), 323 506(2) IPC–ன் கீழும், 3 மற்றும் 4 வது எதிரிகள் மீது 294(b) IPC–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மாணித்து கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை இந்நீதிமன்றத்தால் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரிகளின் பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்துச் செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான அ.சா.பொ.1 மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அழிக்கப்பட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டபின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்த பின்பு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் ஆகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.03.25 17:28:44 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
திண்டிவனம்.

**பிற்சேர்க்கை**

**அரசு தரப்பு சாட்சிகள்**

1. திரு. சக்திவேல் த/பெ.ஆறுமுகம்
2. திருமதி.லோகநாயகி
3. திரு.சக்திவேல் த/பெ.செங்கேணி
4. திரு.கோபால்
5. திரு.விநாயகம் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்–ஓய்வு)
6. திரு. சசிக்குமார் (காவல் உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சாண்றாவணங்கள் பட்டியல்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07.09.2022 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 27.11.2024 | பார்வை மகசரிலுள்ள சாட்சியின் 1–வது கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.3 | 27.11.2024 | கைப்பற்றுதல் மகசரிலுள்ள சாட்சியின் 1–வது கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.4 | 22.07.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 07.08.2025 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 07.08.2025 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 07.08.2025 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.8 | 07.08.2025 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.9 | 07.08.2025 | பிரிவு மாற்று அறிக்கை |

**<u>அரசு தரப்பு சாண்றுபொருள் :</u>** அ.சா.பொ.1 (சுமார் 65cm நீளமும், 2cm அகலமும் கொண்ட இரும்பு ராடு–1 C.P.No.310/2022)

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி</u> : இல்லை**

**<u>எதிரிகள் தரப்பு சாண்றாவணங்கள்</u> :இல்லை**

**<u>எதிரிகள் தரப்பு சாண்றுபொருள்:</u> இல்லை**

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.03.25 17:28:38 +0530

நீதித்துறை நடுவர் எண் 2.
திண்டிவனம்